# 2020–ம் ஆண்டு ஜுலை மாதம் 31ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணிக்கு கொமாரபாளையம் நகராட்சி சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

**முன்னிலை:– திரு.சி.ஸ்டான்லி பாபு, இ.கலை., அவர்கள்.**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர்**

---

**பொருள் எண்.1**

ஆணையாளர் அவர்களின் ஜுன் – 2020 மற்றும் ஜுலை – 2020ம் மாதத்திய நாட்குறிப்பினை கூட்டத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 251 நாள் 31.07.2020
பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன் – 2020 மற்றும் ஜுலை – 2020ம் மாதத்திய நாட்குறிப்பினை கூட்டத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 252 நாள் 31.07.2020
பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்.3**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய புதிய கடை எண்.2ஐ 5.2.2019, 25.11.2019,26.12.2019, 10.1.2020, 28.1.2020, 23.6.2020, 9.7.2020 ஆகிய தேதிகளில் பலமுறை ஒப்பந்தப்புள்ளி பொது ஏலம் விட்டும் ஒருவரும் கோர முன்வராத நிலையில் இறுதியாக 15.7.2020 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலத்தில் ஏலம்கோரி ஒருவரும் முன்வரவில்லை. கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் & முகவரி | | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்ட வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திருமதி.மஞ்சுளா<br>த/பெ கந்தசாமி<br>18AR. கிழக்குகாவேரி நகர்<br>கொமாரபாளையம் | ரூ. | 4100/- |
| 2. | திரு.P. பாண்டியன்<br>த/பெ. ராமகிருட்டிணன்<br>18AR. கிழக்குகாவேரி நகர்<br>கொமாரபாளையம் | ரூ. | 4050/- |
| 3. | திரு.R.P. பரணிதரன்<br>15-122/33E10, ராஜராஜன் நகர்<br>கொமாரபாளையம் | ரூ. | 4700 |

**அலுவலக குறிப்பு :**

ஏற்கனவே பலமுறை ஒப்பந்தப்புள்ளி / பொதுஏலம் விட்டும் ஒருவரும் கோர முன்வராத நிலையில் கடைசியாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் உச்சகேள்வியாக மாத வாடகை ரூ.4700/- என திரு. K.P.பரணிதரன் என்பவர் கோரியுள்ளார். இது சென்றமுறை இதே கடைக்கு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை ரூ.3508/-னை விட ரூ.1112/- கூடுதலாகவும், அருகில் உள்ள கடைகளின் சராசரி வாடகை ரூ.3968/-ஐ விட ரூ.732/- கூடுதலகவும் சென்றுள்ளது. எனவே மேற்படி உச்சகேள்வியை உறுதிசெய்து குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 253 நாள் 31.07.2020

திரு. K.P.பரணிதரன் என்பவர் கோரியுள்ள உச்ச கேள்வியினை உறுதி செய்யப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

கொமாரபாளையம் நகராட்சியில் உள்ள சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பொருட்டு சிறப்பு சாலைகள் திட்டம் 2015 – 16, TURIP 2016 – 17 மற்றும் TURIP 2017 – 18 திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, நகராட்சி பங்களிப்புடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பணிகள் துவங்கி நடைபெற்று வந்தபொழுது, இந்நகராட்சியில் குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகள் துவங்கப்பட்டதாலும், நகரில் அனைத்து பகுதிகளிலும் மின் வாரியம் மூலம் புதைவட கேபிள் பதிக்கும் பணி துவங்கப்பட்டதாலும், TURIP 2016 – 17 Phase-II மற்றும் TURIP 2017 – 18 திட்டப்பணிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சாலைப்பணிகளில் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் சிப்பங்களில் உள்ள சாலைகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. புதிதாக சாலை அமைத்த பின்பு மேற்சொன்ன குடிநீர் பணி மற்றும் மின்வாரிய புதைவட கேபிள் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டதால் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகளை மீண்டும் தோண்ட நேரிடும். இதன் காரணமாக ஒரே சாலைகளை குறைந்த கால இடைவெளியில் மீண்டும் மீண்டும் புதுப்பிக்க நேரிடும் என்பதாலும் மற்றும் தேவையற்ற கூடுதல் செலவினம் ஏற்படும். எனவே, குடிநீர் மேம்பாட்டு பணி, புதைவட பணிகள் நிறைவடைந்த பின்பு விடுபட்ட சாலைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு பணி முடிவறிக்கை தயார் செய்யப்பட்டு தற்போது குடிநீர் மற்றும் புதைவட பணிகள் நிறைவடைந்த நிலையில் விடுபட்ட சாலைகள் அனைத்தும் TURIP 2019 – 2020 மற்றும் IUDM 2018 – 2019 திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது . விடுபட்ட சாலைகளின் விபரம் பின்வருமாறு:

<u>1. TURIP 2016 – 2017</u>

<u>Phase II / Package II</u>

1. வார்டு 8 வடக்கு காந்திபுரம் சாலை
2. வார்டு 12 ஆனங்கூர் லேத் வீதி சாலை
3. வார்டு 19 மணிமேகலை தெரு பிராதான வீதி சாலை
4. வார்டு 19 மணிமேகலை தெரு குறுக்கு வீதியில்

II.<u> TURIP 2017 – 2018</u>

<u>Package III</u>

1. வார்டு 30,31,32 கலைமகள் வீதி சாலை

மேற்கண்ட சாலைப்பணிகள் TURIP 2019 – 2020 மற்றும் IUDM 2018–19 திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் நிறைவடையும் நிலையில் உள்ளது. எனவே, மேற்சொன்ன சாலைகள் நீங்கலாக மீதமுள்ள சாலைகளுக்கான பயனீட்டுச்சான்று மற்றும் பணி முடிறிக்கைகளை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி ஒப்புதல் பெற ஆணையர் (ம) தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 254 நாள் 31.07.2020

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில் தெரு விளக்குகள் பராமரிக்கும் பணியினை தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தெரு விளக்குகளை பராமரிக்கும் தனியார் நிறுவன ஒப்பந்த காலம் 31.03.2020 உடன் முடிவடைகிறது. தற்போது நிலவரப்படி நகராட்சியில் கீழ்காணும் விபரப்படி தெரு விளக்குகளை பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 4' x 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | – | 1589 நெ. |
| 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | – | 164 நெ. |
| 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | – | 118 நெ. |
| 250 வாட்ஸ் மெர்குரி ஆவி விளக்குகள் | – | 62 நெ. |
| 400 வாட்ஸ் உயர்கோபுர மின் விளக்கு (மின் கம்பம்–4) | – | 52 நெ. |
| 1 x 36 வாட்ஸ் CFL எனர்ஜி சேவர் விளக்கு | – | 226 நெ. |
| 2 x 36 வாட்ஸ் CFL எனர்ஜி சேவர் விளக்கு | – | 70 நெ. |
| 2 x 55 வாட்ஸ் CFL எனர்ஜி சேவர் விளக்கு | – | 44 நெ. |
| 2 x 11 வாட்ஸ் CFL எனர்ஜி சேவர் விளக்கு | – | 50 நெ. |
| 70 வாட்ஸ் LED விளக்கு | – | 1 நெ. |
| 50 வாட்ஸ் LED விளக்கு | – | 1 நெ. |
| மொத்தம் | – | 2377 நெ. |

தற்போது நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளின்படி நடப்பாண்டு முதல் மூன்று ஆண்டு காலம் வரை தனியார் மூலம் தெருவிளக்குகளை பராமரிக்கும் பணியினை ஒப்படைப்பது குறித்தும் நடப்பாண்டிற்கு (2020–21) மேற்படி தெரு விளக்குகளை பராமரிக்கும் பணியினை தனியார் மூலம் பராமரிப்பதற்கு உரிய மதிப்பீடு ரூ.39.29 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டள்ளது. எனவே, தனியார் மூலம் தெரு விளக்குகளை பராமரிக்கும் பணிக்கு நடப்பாண்டிற்கு (2020–21) மொத்தம் 2377 தெரு விளக்குகளை பராமரிக்க ரூ.39.29 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. நகராட்சியில் கடந்த பத்தாண்டாக தெரு விளக்குகள் பராமரிக்கும் பணியினை தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருவதினாலும், நகராட்சியில் தெரு விளக்கு பராமரிப்பு பணியில் தற்போது இரண்டு மின்கம்பியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். இவ்விரண்டு மின் பணியாளர்கள் நகராட்சியில் உள்ள ஆழ்துளை கிணறுகளின் 165 மினி பவர் பம்ப்களின் இயக்கத்தினை கண்காணித்து பராமரித்து வருகிறார்கள். கூடுதலாக தெரு விளக்குகள் பராமரிக்கும் பணியினை தற்போது உள்ள இரண்டு மின்கம்பியாளர்களை மட்டும் வைத்து பராமரிப்பது சிரமமாக இருக்கும் என்பதாலும், தெரு விளக்குகளை பராமரிக்க குறியீட்டின்படி தேவையான பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டி உள்ளதால் தொடர்ந்து 2020–21ம் ஆண்டு முதல் மூன்று ஆண்டு காலம் வரை தெரு விளக்குகளை தனியார் மூலம் பராமரிக்கும் வகையில் தனியார் வசம் ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. தெரு விளக்குகளை தனியார் மூலம் பராமரிப்பதற்கு நடப்பாண்டிற்கு 2020–21 ஆம் ஆண்டிற்கு தேவைப்பட்டியலின்படி உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் எண்ணிக்கையினை அடிப்படையாக கொண்டு ரூ.39.29 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மதிப்பீட்டின்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று தனியார் மூலம் தெரு விளக்குகள் பராமரிக்கும் பணியினை கவனிக்கவும் அதற்கான கருத்துருக்களை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 255 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

கொமாரபாளையம் நகராட்சியில் உள்ள சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பொருட்டு சிறப்பு சாலைகள் திட்டம் 2015 – 16 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, நகராட்சி பங்களிப்புடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பணிகள் துவங்கி நடைபெற்று வந்தபொழுது, இந்நகராட்சியில் குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகள் துவங்கப்பட்டதாலும், நகரில் அனைத்து பகுதிகளிலும் மின் வாரியம் மூலம் புதைவட கேபிள் பதிக்கும் பணி துவங்கப்பட்டதாலும், சிப்பம்–1 மற்றும் சிப்பம் 2ல் உள்ள 8 சாலைகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. புதிதாக சாலை அமைத்த பின்பு மேற்சொன்ன குடிநீர் பணி மற்றும் மின்வாரிய புதைவட கேபிள் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டதால் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகளை மீண்டும் தோண்ட நேரிடும். இதன் காரணமாக ஒரே சாலைகளை குறைந்த கால இடைவெளியில் மீண்டும் மீண்டும் புதுப்பிக்க நேரிடும் என்பதாலும் மற்றும் தேவையற்ற கூடுதல் செலவினம் ஏற்படும். எனவே, குடிநீர் மேம்பாட்டு பணி, புதைவட பணிகள் நிறைவடைந்த பின்பு விடுபட்ட சாலைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு பணி முடிவறிக்கை தயார் செய்யப்பட்டு தற்போது குடிநீர் மற்றும் புதைவட பணிகள் நிறைவடைந்த நிலையில் விடுபட்ட சாலைகள் அனைத்தும் TURIP 2019 – 2020 மற்றும் IUDM 2018 – 2019 திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது . விடுபட்ட சாலைகளின் விபரம் பின்வருமாறு:

<u>SRP 2015 – 2016</u>

<u>Package I</u>

1. வார்டு 7 சத்தியாபுரி பிரதான சாலை
2. வார்டு 12 பெரியார் நகர்

<u>Package II</u>

1. வார்டு 14 எல்லை மாரியம்மன் கோவில் வீதி
2. வார்டு 13 சுந்தரம் காலனி பள்ளி சாலை
3. வார்டு 18 ராகவேந்திரா கல்லூரி சாலை
4. வார்டு 19 மணிமேகலைத் தெரு
5. வார்டு 20 தெற்கு காலனி குறுக்கு வீதி
6. வார்டு 33 சுண்ணாம்பு சூளை

மேற்கண்ட சாலைப்பணிகள் TURIP 2019 – 2020 மற்றும் IUDM 2018–19 திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் நிறைவடையும் நிலையில் உள்ளது. எனவே, மேற்சொன்ன சாலைகள் நீங்கலாக மீதமுள்ள சாலைகளுக்கான பயனீட்டுச்சான்று மற்றும் பணி முடிறிக்கைகளை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி ஒப்புதல் பெற ஆணையர் (ம) தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 256 நாள் 31.07.2020
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.12981/2018/இ3, நாள்.21.08.2018ன்படி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத்

திட்டம்–2018–19ன்கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள ரூ.1000.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 03.12.2018ம் தேதியில் பணி உத்திரவு வழங்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.17349/2019/இ3, நாள்.16.10.2019ன்படி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்–2019–2020ன்கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள ரூ.500.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 05.11.2019ம் தேதியில் பணி உத்திரவு வழங்கப்பட்டது. திட்டப் பணிகளின் நிதி ஒதுக்கீடுகள் விபரம் பின்வருமாறு:–

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | திட்ட மதிப்பீடு | திட்ட மான்யத் தொகை விபரம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | TURIP | SFC / CFC | SFC Incentive Grant | நகராட்சி பங்களிப்பு | மொத்தம் |
| 1. | 2018–19 | 1000.00 | 380.00 | 300.00 | 220.00 | 100.00 | 1000.00 |
| 2. | 2019–2020 | 500.00 | 125.00 | 275.00 | – | 100.00 | 500.00 |
| | மொத்தம் | 1500.00 | 505.00 | 575.00 | 220.00 | 200.00 | 1500.00 |

மேற்காணும் திட்ட நிதி ஒதுக்கீடுகளில் 2018–2019ம் ஆண்டிற்கான SFC Incentive Grant மான்யத் தொகை ரூ.220.00 இலட்சம் விடுவிக்கப்படவில்லை. மேலும், நகராட்சி பங்களிப்புத் தொகை ரூ.100.00 இலட்சம், நகராட்சியின் நிதி நிலை போதுமானதாக இல்லாததால் ஒப்பந்ததாரருக்கு நகராட்சி நிதியிலிருந்து பட்டியல் தொகை வழங்க இயலாத நிலை உள்ளது.

மேலும், 2019–2020ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் நகராட்சி பங்களிப்புத் தொகை ரூ.100.00 இலட்சம், நகராட்சியின் நிதி நிலை போதுமானதாக இல்லாததால் ஒப்பந்ததாரருக்கு நகராட்சி நிதியிலிருந்து பட்டியல் தொகை வழங்க இயலாத நிலை உள்ளது.

மேலும், 2018–2019ம் ஆண்டிற்கான SFC Incentive Grant மான்யத் தொகை ரூ.220.00 மற்றும் நகராட்சி பங்களிப்பு ரூ.100.00 இலட்சம் மற்றும் 2019–2020ம் ஆண்டிற்கான நகராட்சி பங்களிப்புத் தொகை ரூ.100.00 இலட்சம் மொத்தம் ரூ.420.00 இலட்சம். தற்போது நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால், மேற்காணும் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க ஏதுவாக ரூ.420.00 இலட்சத்தினை இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதியிலிருந்து இந்நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு முன்மொழிவு அனுப்ப கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால், மேற்காணும் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க ஏதுவாக ரூ.420.00 இலட்சத்தினை இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதியிலிருந்து இந்நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு முன்மொழிவு அனுப்ப கூட்டப் பொருள் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 257 நாள் 31.07.2020
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

கொமராபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN34 D6226 வாகனமானது 2006 ஆம் ஆண்டு வாங்கப்பட்டது. தற்போது வரை 3.10.000 கி.மீட்டர் துாரம் இயங்கியதால் வாகனத்தில் உள்ள இன்ஜினில் பழுது ஏற்பட்டு வாகனத்தை இயங்க முடியாத நிலையில் உள்ளது. மேலும் இன்ஜின் ரீபோரிங் செய்து Stand Size Piston மாற்ற வேண்டி உள்ளது. இதனால் நாள்தோறும் இந்நகராட்சியில்

பொதுமக்களின் அத்தியாவசிய பயன்பாட்டிற்கான குடிநீர் பணிகள் தெருவிளக்கு மற்றும் கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் சூழ்நிலையில் மேற்படி பணிகளை பார்வையிடவும் மேற்கண்ட பணிகளுக்கு தேவையான பொருட்கள் மற்றும் பணியாளர்களை அழைத்து செல்ல மேற்கண்ட வாகனத்தின் தேவையானது மிகவும் அத்தியாவசியமாக உள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தின் அத்தியாவசிய தேவையான கருதி வாகனத்தை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.82,000/-க்கு அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட வாகனத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வாகனத்தின் பழுதுகளை சரிசெய்ய கொரோனா நோய் தொற்று பரவாமல் தடுக்க ஊரடங்கு அகலில் உள்ளதால் வாகனத்தை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தாரிடம் விட்டு சரிசெய்ய இயலாத நிலையில் உள்ளதால் உள்ளூர் நிறுவனத்தாரிடம் வாகனத்தை விட்டு விலைப்புள்ளி பெற்று வாகனத்தை சரி செய்தமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 258 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான JCB வாகனம் எண். TN34 R1914 வாகனத்திற்கு இன்ஸ்சூரன்ஸ் காலம் 19.7.2020 ஆம் தேதி உடன் முடிவடைவதால், மேலும் ஓராண்டிற்கு (20.7.2020 முதல் 19.7.2021) புதுப்பிக்க வேண்டும் கிளை மேலாளர் நேஷனல் இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் பவானி கிளை என்பவரின் கேட்பு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தின் பாதுகாப்பு குறித்து மேலும் ஓராண்டிற்கு புதுப்பிக்க தொகை ரூ.12,268/- ஐ செலுத்த தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட வாகனத்தின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு கருதி பணியின் அவசர அவசியம் குறித்து தனி அலுவலரின்முன் அனுமதி பெற்று மேற்கண்ட தொகை ரூ.12,268/- ஐ செலுத்தியமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 259 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

கொமாரபாளையம் நகராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருவதால் அதில் உள்ள ஒருமுனை பின் இணைப்பை (மின் இணைப்பு எண்.156007623) தற்காலிக துண்டி செய்யகோரி விண்ணப்பிக்கப்பட்டதில் கேட்புத் தொகை ரூ.1490/-ஐ செலுத்த வேண்டும் என இளநிலை பொறியாளர் இளமின் பகிர்மான தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சி.எண்.பாளையம் பிரிவு கொமாரபாளையம் என்பவர்மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையை செலுத்த தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.1490/- ஐ செலுத்தியமைக்கும் அதற்காகும் செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 260 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

இந்நகராட்சியில் உள்ள தெரு விளக்குகளை பராமரிக்கும் பணியினை தனியார் வசம் ஒப்படைத்து பராமரிக்கும் வகையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி M/s சஞ்சய் டிரேடர்ஸ் தருமபுரி என்பவர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் 30.8.2020 ஆம் தேதி உடன் ஒப்பந்த நீட்டிப்பு காலம் முடிவடைகிறது. மேலும் தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர தொழில்நுட்ப அனுமதிவேண்டி நகராட்சி ஆணையர் சென்னை அவர்களுக்கு திட்ட மதிப்பீடு சமர்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொழில்நுட்ப அனுமதி வரும் வரை கூடுதலாக நான்கு மாத காலத்திற்கு 1.9.2020 முதல் 30.09.2020 வரை தற்போது இந்நகராட்சி தெருவிளக்குகளை பராமரித்து வரும் தனியார் நிறுவனம் M/s.சஞ்சய் டிரேடர்ஸ் தருமரி என்பவர் மூலம் ஏற்கனவே குறிபிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினம் ரூ.1,70,000/- இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேலும் இதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,70,000/- ஐ இலட்சத்திற்கான நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 261 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.12</u>

கொமாரபாளையம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக 36 பேட்டரி வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தற்போது மொத்தமுள்ள 36 வாகனங்களில் வண்டி எண்.3/28-ல் போர்க் செட் பழுதாகியும் வண்டி எண்.27/28-ல் போர்க் செட்டி மற்றும் சிஸ்டம் செட் பழுதாகி உள்ளதால் அவற்றை உடனடியாக பழுது சரி செய்து மீண்டும் இயக்கத்தில் வைக்க ஆகும் செலவினம் ரூ.13,000/- க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்கண்ட பணியானது பொது மக்களின் பொது சுகாதார பணியாக இருப்பதாலும் தற்போது கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருவதாலும் மேற்கண்ட பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டி உள்ளதால். உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ள 2020ஆம் தேதி அன்று விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்கண்ட விபரம் படிக்கு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளையும் கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | திரு.K.S.மாரியப்பன் பவானி | ரூ. 12900/- |
| 2) | திரு. S.A. சக்கரபாணி & சன்ஸ் பவானி | ரூ. 13425/- |
| 3) | திரு. M. அப்புசாமி பவானி | ரூ. 13650/- |

**அலுவலக குறிப்பு**

1) மேற்கண்ட பணிக்கான உத்தேச செலவினம் ரூ.13000/- அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) மேற்கண்ட பணியானது பொதுமக்களின் பொதுசுகாதார பிரச்சனையாக இருப்பதாலும் மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி உடனடியாக பணியை செய்ய வேண்டி உள்ளதால் நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் பணியினை மேற்கொள்ளவும். பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள திரு.K.S. மாரியப்பன், பவானி என்பவரின் குறைந்த விலைப்புள்ளிகளை ஏற்று பணி உத்தரவு மற்றும் பட்டியல் தொகை வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 262 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN34 X 0576 வாகனத்திற்கு சர்வீஸ் மற்றும் இதர பழுதுகளை சரி செய்து தருமாறு இந்நகராட்சி ஓட்டுநர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தின் அவசர அவசியம் கருதி சர்வீஸ் மற்றும் இதர பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.63,000/– க்கு ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட வாகனத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வாகனத்தை உடனடியாக சரி செய்யவும், கொரோனா (Covid – 19) நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வாகனத்தின் அவசியம் குறித்து அங்கீகரிக்கப்பட்ட பணியினை ஏதும் இல்லாததால் உள்ளூர் நிறுவனத்தாரிடமிருந்து விலைப்புள்ளி பெற்று வாகனத்தை சரி செய்ய பணி உத்தரவு வழங்கியமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 263 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்கு சொந்தமான சுந்தரம் காலனி நகராட்சி பள்ளியின் வகுப்பறை கட்டிடத்தின் அடித்தளம், கட்டிடங்கள் மற்றும் மேற்கூரைகள் மிகவும் பழுதடைந்து மாணவர்களுக்கு ஆபத்தான நிலையில் உள்ளதாக முதல்வர், IRTT கல்லூரி, ஈரோடு அவர்களின் ஆய்வு அறிக்கை நாள்.19.06.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பழுதடைந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பள்ளிக்கு புதியதாக வகுப்பறைகள் கட்ட வேண்டியதின் அவசியம் கருதி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.24.90 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.24.90 இலட்சத்திற்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 264 நாள் 31.07.2020

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஆணையாளர் அவர்களால் பொது சுகாதாரப் பணிகளின் நேரடி ஆய்வின் பொழுது, பொது சுகாதாரப் பிரிவு 1க்கு என்று தனியாக பகுதி (Division) அலுவலகம் இல்லாததால் வார்டு எண்.3 சந்தைப்பேட்டை அருகே உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாகத்தில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்களுக்கு வருகைப் பதிவேடு எடுப்பதற்கும், துப்புரவு பணியாளர்களுக்கு வீதிகள் ஒதுக்கீடு செய்யும் பணிகளும் நடைபெற்று வருகிறது. மேலும், அப்பிரிவு துப்புரவு பணியாளர்களின் பொருட்களை (Sanitary Materials) வைப்பதற்கும் இட வசதி இல்லாததால், பொது சுகாதாரப் பிரிவு 1க்கு வார்டு எண்.11 பேருந்து நிலைய வளாகத்தில் அம்மா உணவகம் அருகில் புதியதாக பகுதி (Division) அலுவலகம் கட்ட ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. எனவே, மேற்படி பகுதியில் நகராட்சி பொறியாளருடன் ஆய்வு செய்யப்பட்டு புதியதாக பகுதி அலுவலகம் கட்ட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.9,50,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.9,50,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 265 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

இந்நகராட்சிக்கு சொந்தமான சுந்தரம் காலனி நகராட்சி பள்ளியின் வகுப்பறை கட்டிடத்தின் அடித்தளம், கட்டிடங்கள் மற்றும் மேற்கூரைகள் மிகவும் பழுதடைந்து மாணவர்களுக்கு ஆபத்தான நிலையில் உள்ளதாக முதல்வர், IRTT கல்லூரி, ஈரோடு அவர்களின் ஆய்வு அறிக்கை நாள்.19.06.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பழுதடைந்த பள்ளி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4.60 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.4.60 இலட்சத்திற்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 266 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் 100HP (120HP Stand by மோட்டார்) மற்றும் 50HP (50HP Stand by மோட்டார் மோட்டார்களை கொண்டு நகரில் அமைந்துள்ள 8 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு தண்ணீர் ஏற்றப்பட்டு நாள்தோறும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் 100HP டர்பைன் மோட்டார் பயன்பாட்டில் இருந்தபொழுது திடீரென நின்றுவிட்டது. மோட்டாரினை கழற்றி பரிசோதித்த பொழுது அதன் காயில் எரிந்த நிலையிலும் பம்ப் பேரிங் பழுதடைந்த நிலையிலும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காரணமாக 120HP Stand by மோட்டார் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. தொடர்ச்சியான இயக்கம் காரணமாக 120 HP டர்பைன் மோட்டார்களிலும் ஏதேனும் பழுது

ஏற்பட்டால் நகரில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. எனவே, பழுதடைந்துள்ள 100HP டர்பைன் மோட்டார் பழுதுகளை சரி செய்து பயன்பாட்டிற்கு வைக்க ஆகும் செலவினம் ரூ.1,70,000/– ஐ பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சியின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து கீழ்காணும் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொண்டதற்கும் அதற்கான செலவினம் வழங்கியதையும் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம்

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | திரு.K.தனபாலன், ஈரோடு | ரூ.169176/- |
| 2) | M/s. அசோக்ராஜா & கோ ஈரோடு | ரூ.169505/– |
| 3) | M/s. கோகுல் என்ஜினியரிங் ஒர்க்ஸ் பாவனி | ரூ.169505/– |

அலுவலக குறிப்பு

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.(1) ல் கண்டுள்ள திரு. K.தனபாலன், ஈரோடு அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டும், அவசர அவசியம் கருதியும், சட்டம் 1920 பிரிவு எண்.15– ன் கீழ் மேற்கொண்ட ரூ.169176/– செலவினத்தை மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 267நாள் 31.07.2020
பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.18**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண். TN34 D 6226 வாகனத்திற்கு புதிய மின்கலம் வாங்கி பொருத்தும் பணியை மேற்கொள்ள 30.5.2020 ஆம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s SHRII BHARANI ENTERPRISES<br>104/4, New Pallipalayam Road Opp Pambhu Puthu Komarapalayam | 8400/- |
| 2 | M/s. Jai EnterÁises<br>140, Salem main Road Komarapalayam | 9000/- |

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி வழங்கலம்.
2. மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள M/s.SHRII BHARANI ENTERPRISES Komarapalayam என்பவரின் விலை விபரமானது மற்ற நிறுவனத்தாரின் விலை விபரத்தை விட மிகவும் குறைவாக இருப்பதால் மேற்படியாரின் விலை விபரத்தை ஏற்று, பணி உத்தரவு வழங்கியமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட வாகனத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.8400/-ஐ உடனடியாக வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 268 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

கொமாரபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வாரசந்தையில் அமைந்துள்ள நுண் உரம் செயகலாக்க மையத்தில் கன்வேயர் மெஷினில் உள்ளபெல்ட் புதியய மாற்றி பொருத்தும் பணியை மேற்கொள்ள 27.5.2020ஆம் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில், கீழ்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1) | M/s. AALPHA Info Stystems 183/7 Mettur Road Sarvana Buildings Erode - 638011 | 28000+18% Gst |
| 2 | M/s. Total Solutions Vinayagar Nivas Manickam palayam Erode - 638004 | 30,000+18% Gst |
| 3 | M/s. Fine Air Systems 72, Ranganathar Street Venkitn puran Coimbatore – 641013 | 31500+18% Gst |

அலுவலக குறிப்பு

1) மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் கண்டுள்ள M/s. AALPHA Info Stystems Erode என்ற நிறுவனத்தாரின் விலை விபரமானது மற்ற நிறுவனத்தாரின் விலையைவிட மிகவும் குறைவாக இருப்பதால் மேற்படியாரின் விலையை ஏற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் அதற்காகும் செலவித்தை இந்நகராட்சி பொது நிதியில் வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.
2) மேலும் பொதுசுகாதார பிரிவு பணியாளர்அவசர அவசியம் கருதி அன்றாட சேகரம் ஆகும் குப்பைகளை உரமாக மாற்றும் பணி தேய்வு பெறாமல் சுற்றுபுற சூழல் மாசு ஏற்படாத வகையில் பணியினை உடனடியாக மேற்கொண்ட தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியான மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவின தொகை ரூ.33040/—ஐ செலுத்தியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 269 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கலைமகள் வீதியில் உள்ள தகன உலை எரிவாயு மயானம் மற்றும் ஏரி தெருவில் உள்ள ஆடு இறைச்சி கூட கட்டிடங்களின் கட்டுமான அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் தொழில் சம்மந்தமாக அதனை இயக்குவதற்கான இசைவினை (Consent Operation) இணையதளத்தின் மூலமாக விண்ணபத்தினை பதிவு செய்து நடப்பாண்டிற்கு புதுப்பிக்க வேண்டும் என மாவட்ட சுற்று சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுபாடு வாரியம் கொமாரபாளையம் என்பவரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இரண்டு கட்டுமான அமைப்புகளின் இசைவுகளை தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியம் கொமாரபாளையம் அவர்களுக்கு கீழ்காணும் விபரப்படி தொகையினை செலுத்தி இசைவினை பெற ஆணையாளர் அவர்களின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | விபரம் | தகணஉலை எரிவாயு மயானம் ரூ. | ஆடு இறைச்சி கூடம் ரூ. | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட சுற்று சூழல் பொறியாளர் கொமாரபாளையம் அவர்களுக்கு இசைவினை பெற செலுத்த வேண்டிய தொகை | 44250/— | 12200/— | 56450/— |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | மேற்படி இசைவினைபெற இணையதளத்தில் ஆன்லைனில் விண்ணப்பித்து இசைவினை பெற கன்சல்டன்ட் கட்டணம் | 5000/– | 5000/– | 10000/– |
| | மொத்தம் தொகை | | | 66450/– |

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமமதி பெற்று தொகை ரூ.66,450/– ஐ வழங்கியமைக்கும், அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 270 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.21**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஜே.கே.கே. சுந்தரம் நகர், நகராட்சி தொடக்கப்பள்ளியில் 1985 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இரண்டு கட்டிடங்கள் சேதமடைந்து மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் மேற்படி வகுப்பறைகளில் மாணவ மாணவிய. அமர்ந்து கல்வி கற்க இயலாத நிலையில் இருப்பதனால், மேற்ற்ண்ட இரண்டு கட்டிடங்களின் தரத்தினை ஆய்வு செய்து ஸ்திரதன்மை (Stabling) சான்று வழங்ககோரி முதல்வர் IRTT ஈரோடு அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், கேட்பு தொகை ரூ.17700/-ஐ செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை செலுத்த தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர் கல்வி கற்பதன்முக்கியத்துவம் குறித்து பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று சான்றுக்கான தொகை ரூ.17,700/-ஐ செலுத்தியமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 271 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.22**

கொமாரபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.25ல் உள்ள அண்ணாநகர் பகுதியில் அமைந்துள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனங்கள் நிறுத்துமிடத்தின் அருகாமையில் புதியதாக கட்டப்பட்டுள்ள பொது சுகாதார பிரிவு கட்டிடத்திற்கு மும்முனை மின் இணைப்பு கோரி இளநிலை பொறியாளர் இளநிலை பகிர்மான தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சி.என்.பாளையம் பிரிவு அவர்களுக்கு விண்ணபிக்கப்பட்டதில் கேட்பு தொகை 9968/- ஐ செலுத்த வேண்டும் என கேட்பு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்டதொகை ரூ. யினை செலுத்த தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பொது சுகாதார பிரிவு கட்டிடத்திற்கு உடனடியாக மும்முனை மின் இணைப்பு தேவைப்படுவதால், மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்

அனுமதி பெற்று தொகை ரூ.9968/- செலுத்தியமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 272 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.23**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான JCB வாகனம் எண்.TN34 R 1914 வாகனத்திற்கு சாலைவரி 31.3.2020 உடன் முடிவடைவ்தால், மேலும் ஓராண்டிற்க புதுப்பித்து தருமாறு இந்நகராட்சி ஓட்டுநர் ஓராண்டிற்க புதுப்பித்து தருமாறு இந்நகராட்சி ஓட்டுநர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தின் பாதுகாப்பு கருதி மேலும் ஓராண்டுகாலம் (1.4.2020 முதல் 31.3.2021 வரை) புதுப்பிக்க ஆகும் செலவினத் தொகை ரூ.10,000/-ஐ களியனுாா் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்த ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட வாகனத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், தற்போது கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் வாகனத்தின் அவசியம் கருதி சாலை வரியினை உடனடியாக செலுத்தியமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட வாகனத்திற்க 1.4.2020 ஆம் தேதியுடன் முடிவடைந்த நிலையில் கொரோனா Covid – 19 நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமலில் இருந்ததால் தற்போது மாநில அரசின் அறிவுரைகளின்படி சாலை வரியினை ஜீன் - 2020 ஆம் மாதம் முதல் சொந்த அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்திற்கான சாலை வரி தொகை ரூ.10,000/- ஐ செலுத்தியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 273 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.24**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கலைமகள் வீதியில் உள்ள தகன உலை எரிவாயு மயானத்தின் கட்டுமான பணிக்கு Consent Establishment இசைவினை தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியம் மூலம் பெறப்பட்டுள்ளது. மேற்படி தகன உலை எரிவாயு மயானத்திற்கு Consent Operation இயங்குவதற்கான இசைவினை நடப்பாண்டு வரை (2020-2022 வரை) தொகை ரூ12,200/- ஐ செலுத்த வேண்டும் என மாவட்ட சுற்று சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியம் கொமாரபாளையம் என்பவரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை செலுத்த ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று மேற்படி தகன உலை எரிவாயு மயானத்தின் Consent Operation இசைவினை இணையதளத்தில் உடனடியாக பதிவு செய்ய வேண்டிருப்பதால், மேற்கண்ட தொகை ரூ.12,200/-ஐ வழங்கியமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 274 நாள் 31.07.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.25</u>**

கொமாரபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.5 கம்பன் நகர் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் பராமரிப்பு பணி காரணமாக அதில் உள்ள 3HP சப் மோட்டார் (சர்வீஸ் எண்.158 006.3558) இடமாற்றம் செய்து தருமாறு இளநிலை பொறியர் இளநிலை பகிர்மான தமிழ்நாடு உட்பத்தி மற்றும் பகிர்மான கழகம் புறநகர் பிரிவு கொமாரபாளையம் என்பவருக்கு விண்ணப்பிக்கப்பட்டதில் கேட்பு தொகை ரூ.58651/-ஐ செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை செலுத்த ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.58651/- ஐ வழங்கியமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 275 நாள் 31.07.2020
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.26</u>**

